பக்கங்கள் 16+2

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 23 வியாழக்கிழமை 09.10.2025 | அதிர்வு 70

## அரியாலையில் எட்டு பேர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் கழிவுகளைக் கொட்ட வந்தவர்களை மறித்து அடாவடியில் ஈடுபட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டி 8 பேரை பொலிஸார் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### சர்வதேச நீதி கோரி செம்மணியில் அமைக்கப்பட்ட

# 'அணையா விளக்கு' நினைவுத் தூபி அடித்து உடைப்பு



## விஷமிகள் வெறியாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்ட 'அணையா விளக்கு' நினைவுத் தூபி விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது" என்ற வளைவுக்கு அருகில் கடந்த ஜீன் மாத இறுதியில் செம்மணி மனிதப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி 'அணையா விளக்கு' போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது. 02

# வெடுக்குநாறி ஆலய முன்னாள் நிர்வாகத்தினரை இன்று இரண்டு மணித்தியாலங்கள் துருவிய ரி.ஐ.டி.

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரிடம் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் (ரி.ஐ.டி) இன்று இரண்டு மணிநேரம் விசாரணை நடத்தினர்.



வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் செ.சசிகுமார் மற்றும் செயலாளர் து.தமிழ்ச்செல்வன் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு வவுனியா பயங்கரவாதத் தடுப்பு 02

# பெக்கோ சமனின் மனைவிக்கு விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

## 13 வங்கிக் கணக்குகளை முடக்குமாறும் நீதிவான் உத்தரவு

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'பெக்கோ சமன்' என்பவரின் மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "பெக்கோ சமனின்"மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவர் கடும் பாதுகாப்பு மத்தியில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'பெக்கோ சமனின்' மனைவியுடன் தொடர்பில் இருந்தவர்களுக்குச் சொந்தமான 13 வங்கிக் கணக்குகளைத் தற்காலிகமாக முடக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள்



மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கெஹெல்பத்தர பத்மே', 'கொமாண்டோ சலிந்த' , 'பாணந்துறை நிலங்க', 'பெக்கோ சமன்', 'பெக்கோ சமனின்' மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலில் இருந்த 'பெக்கோ சமன்' என்பவரின் மனைவி கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'பெக்கோ சமன்' என்பவரின் மனைவி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட 'கெஹெல்பத்தர பத்மே' உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஐந்து படகுகளில் அத்துமீறிய 47 இந்திய மீனவர்கள் கைது!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த 47 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் மற்றும் நெடுந்தீவுக்கு அருகிலுள்ள கடற்பரப்புக்களில் நேற்று



இரவு ஐந்து படகுகளில் அத்துமீறி வந்து மீன்பிடித்த 47 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், ஐந்து படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கடற்படை இன்று தெரிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வெடுக்குநாறி...**

விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கடந்த சில தினங்களுக்கு முன்பாக நெடுங்கேணி பொலிஸார் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து மேற்படி இருவரும் வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவின் அலுவலகத்தில் ஆஜராகினர். அவர்களிடம் ஆலயம் தொடர்பாகவும், குடும்ப விவரங்கள் மற்றும் விடுதலைப்புலிகள் தொடர்பாகவும் மற்றும் ஏனைய பல விடயங்கள் தொடர்பாகவும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஆலயத்தின் முன்னாள் செயலாளர் து.தமிழ்ச்செல்வன்,

"இந்த விசாரணையின் போது எமது ஆலயம் சார்ந்த விடயங்களையும், எமது தனிப்பட்ட தகவல்களையும் கேட்டிருந்தனர். நாம் அனைத்துக்கும் பதில் அளித்திருந்தோம். அந்தவகையில், மதம் சார்ந்த பணிகளை முன்னின்று மேற்கொள்பவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்தி நசுக்கும் செயற்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. மதம் சார்ந்த செயற்பாடுகளுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஏன் விசாரணை செய்யப்பட வேண்டும்? இந்த அரசும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதில் முன்னின்று செயற்படுகின்றது.

குறிப்பாக எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் எங்களை மாத்திரம் தொடர்ச்சியாக விசாரணை செய்கின்றனர்." – என்றார்.

**'அணையா விளக்கு'...**

இந்தப் போராட்டத்தின் போது 'அணையா விளக்கு' ஏற்றப்பட்டு இருந்தது. போராட்டத்தின் முடிவில் அந்தப் பகுதியில் அணையா விளக்கு நினைவுத் தூபி ஒன்றும் அமைக்கப்பட்டது.

அந்த நினைவுத் தூபியே தற்போது விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

**அரியாலையில்...**

கைது செய்துள்ளனர்.

அரியாலைப் பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரியாலை மக்கள் நேற்று புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இன்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனத்தில் அந்த இடத்துக்குக் கழிவுகளைக் கொண்டு வந்த சமயம் அந்தப் பகுதியில் மக்கள் கூடி வாகனத்தை மறித்து எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் அங்கிருந்தவர்களோடு பேச்சுக்களை நடத்தி, இந்த முறை வாகனத்தை அனுமதிக்குமாறு கோரியதை அடுத்து, வாகனத்தைச் செல்ல மக்கள் அனுமதித்தனர்.

அதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் தங்குமிடத்தினர் அந்தப் பகுதியில் உள்ள தமது காணி ஒன்றில் கழிவுகளைக் கொட்ட வந்த போது, அவர்களின் வாகனத்தை மறித்துச் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடாவடியில் ஈடுபட்டு பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனக் குற்றஞ்சாட்டி 8 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலையைக் குப்பை மேடாக்கும் முயற்சியைத் தடுக்கப் போராடிய வர்களைப் பொலிஸார் பொய்க் குற்றஞ்சாட்டி கைது செய்துள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



# பொன்சேகா மீது போர்க்குற்றம் ஏன் முன்வைக்கப்படவில்லை?

## இப்படி மஹிந்த அணி கேள்வி

"முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது எதற்காகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட வில்லை?" – என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையி லான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேள்வி எழுப்பியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கடும் விமர்சனங்களை சரத் பொன் சேகா முன்வைத்து வருகின்றார். மஹிந்த ராஜபக்ஷ தூக்குத் தண்டனைக்குத் தகுதியானவர் என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார். இதையடுத்தே, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய சரத் பொன் சேகா செயற்படுகின்றார் என்றும், அதற்காகவே அவருக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட வில்லை என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

"இறுதிப் போரை முடிப்பதற்கு முன்னர், மஹிந்த ராஜபக்ஷவால் போர் நிறுத்தம் வழங்கப்பட்டது எனச் சரத் பொன்சேகா கூறி வருகின்றார். இது பொய்யான அறி விப்பாகும். போர் முடிவுக்கு வரப்போகின் றது என்பது தெரிந்திருந்தால், எதற்காக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வ தற்காக சரத் பொன்சேகா சீனாவுக்குச் சென்றார்? முடியப்போகும் போருக்கு எதற்காக ஆயுதங்கள்? போர் முடியப் போகின்றது என மஹிந்தவுக்கும் தெரி யாது. பொன்சேகாவுக்கும் தெரியாது.

போரின்போது பணியாற்றிய படைத் தளபதிகளில் பொன்சேகாவைத் தவிர, ஏனைய அனைவருக்கும் எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. ஆனால், பொன்சேகா வுக்கு எதிராக எந்தத் தரப்பாலும் போர்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை. ஏனெனில், படையினரை ஐரோப்பிய நாடுகளிடம் காட்டிக் கொடுத்தவரே பொன்சேகாதான்." – என்றார்.

# விபத்தில் சிக்கி உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளம் காண பொதுமக்களிடம் உதவி கோரல்

விபத்தில் சிக்கி உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண சீதுவைப் பொலிஸார் பொது மக்களிடம் உதவி கோரியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் – கொழும்பு வீதியில் கடந்த செப்டெம்பர் 25 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் மோதி படுகாயமடைந்த பெண் ஒருவர் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பெண்ணின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது என் றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

எனவே, பொதுமக்களிடம் உதவி கோரி உயிரிழந்த பெண்ணின் புகைப் படம் ஒன்றைப் பொலிஸார் வெளி யிட்டுள்ளனர்.

இந்தப் புகைப்படத்தில் உள்ள பெண் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் சீதுவை பொலிஸ் நிலையத்தின் 0718591637 அல்லது 011 – 2253524 என்ற தொலை பேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




CLICK HERE VIDEO




# இன்று நாடாளுமன்றத்தில் வாணி விழா

புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை நாடாளுமன்றம் இணைந்து நவராத்திரி கால வாணி விழாவை இம்முறையும் மிக சிறப்பாக நடத்தின. இன்று காலை நாடாளுமன்ற வளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் விசேட ஏற்பாட்டில் இந்த நிகழ்வுக்கு சபாநாயகர் அனுமதி வழங்கியமையைத் தொடர்ந்து நாடாளுமன்ற ஆராய்ச்சி அலுவலர் விஸ்வலிங்கம் முரளிதாஸின் ஒருங்கிணைப்பில் இந்து குருமார் அமைப்பின் தலைவரும் அச்சுவேலி சிவஸ்ரீகுமாரசுவாமி குருக்கள் அறக்கட்டளையின் ஸ்தாபகருமான சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள் தலைமையில் பூஜைகள் நடைபெற்று காளாஞ்சியுடன் கூடிய திருவருள் பிரசாதம் வழங்கி வைக்கப்பட்டது.

உலகம் முழுவதும் தமிழ் இந்து மக்களால் பெருமையுடன் கொண்டாடப்படும் நவராத்திரி விழா நாட்டின் உயர்ந்த மரியாதைக்குரிய நாடாளுமன்றத்தில் கொண்டாடப்படுவது ஒரு சிறப்பான நிகழ்வாகும்

கடந்த சில ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த இவ்விழா அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் குருக்கள் சார்ந்த குழுவினருடைய முயற்சியில் இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.






# நமது கருத்து

## மலைக்க வைக்கும் கடன்

நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் தொகைகள் பற்றிய அறிவிப்பு - தகவல் - மலைக்க வைப்பதாக இருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற பொது நிதிக் குழுக் கூட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் தொடர்பில், நாட்டின் கடன் முகாமைத்துவ அலுவலக அதிகாரிகள் தகவல் வெளியிட்டு இருக்கிறார்கள்.

அதன்படி -

நாட்டில் வெளிநாட்டு கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். அதாவது சுமார் 11 லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபா.

அதேபோல உள்நாட்டு கடன் 19 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா.

மொத்தமாகப் பார்த்தால் சுமார் 30 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபா.

இவையெல்லாம் கோடிகளின் எண்ணிக்கை.

நினைத்துப் பார்க்கும்போது நாடு எவ்வாறு இவ்வளவு கடன்களை மீளளித்து மீண்டெழப் போகின்றது என்பது மலைப்புக்குரியதாக இருக்கிறது.

ஆயினும், நாடு மீளச் செலுத்த வேண்டிய கடன் தொகைகளின் தவணைக் கொடுப்பனவுகள் குறித்து நாடாளுமன்றப் பொது நிதிக் குழு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய விதத்தில் தகவல்கள் தரக்கூடிய வகையில் - பதில் அளிக்கக்கூடிய நிலையில் - நாட்டின் கடன் முகாமைத்துவ அலுவலக அதிகாரிகள் இருக்கவில்லை என்று குறை கூறப்படுகின்றது.

நாடு மிக மோசமான கடன் சிக்கலில் மாட்டுப்பட்டு மீள முடியாமல் தடுமாறுகின்ற இந்தக் கட்டத்தில் கூட நாட்டின் கடன் முகாமைத்துவ அலுவலகத்தை நிபுணத்துவம் மிக்கதாக அரசாங்கம் மாற்றாமல் இருப்பது குறித்து குறை கூறப்படுகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான தவணைக் கொடுப்பனவுகளை வெற்றிகரமாகத் தள்ளிப் போட்டுள்ளோம். 2028 வரை அந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் கடன் நிலுவைகளை செலுத்தும் கட்டாய நிலைமை 2028 ஆம் ஆண்டில் ஏற்படும் போது நாடு மிக மோசமான - முன்னைய நிலைமையை விட அதி தீவிரமான - நெருக்கடிகளை எதிர்கொள்ளுமென்று இப்போதே எதிர்வு கூறப்படுகின்றது.

இப்போதைய அரசாங்கம் தன்னுடைய இந்த ஆட்சியை முடிக்கின்ற காலகட்டத்தில் - அடுத்த ஆட்சியாளர்களின் தலையில் - கடன் மீளளிப்புடன் கூடிய நெருக்கடி விழும் என்று தெரிகின்றது.

அதனை எதிர்கொள்வதற்கு, குறைந்த பட்சம் நாட்டின் அன்றாட நடவடிக்கைகளை கொண்டு செல்லக் கூடிய அளவுக்காவது நாட்டின் நிதி நிலைமையைப் பேணுவது முக்கியமாகும்.

கடன் மீள்ளிப்புத் தொடர்பான நாட்டின் முகாமைத்துவ அலுவலகத்தை அரசு பேணுகின்ற விதம் - அங்குள்ள நிபுணத்துவத் திறமை - ஆகியவற்றை நோக்கும் போது, அத்தகைய நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையில் அரசு இல்லை என்றே தோன்றுகின்றது.

கற்பனை பண்ண முடியாத அளவுக்கு பெருமளவு கடனை வாங்கி வைத்துக் கொண்டு, அதற்கான மீளளிப்பை இன்னும் மூன்று ஆண்டுகளில் செய்யத் தொடங்க வேண்டிய நெருக்கடியை எதிர்கொண்டபடி, நாட்டின் கடன் மீளளிப்புத் தொடர்பான முகாமைத்துவ அலுவலகத்தை உரிய முறையில் பேணாமல் இருப்பது மிக முட்டாள்தனமான நிர்வாகமாகவே படுகின்றது.

# நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தால் உதவிகள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர் )

கிழக்கு மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத் தால் சம்மாந்துறை கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட நலிவுற்ற குடும்பங் களிலுள்ள மாணவர்கள் வீட்டில் இருந்து பாடசாலைக் கல்வியைத் தொடர்வதற் குச் சைக்கிள் வழங்கும் வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது.




இந்தத் திட்டத்தினூடாக இறக்காமம்



பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய் யப்பட்ட மாணவர்களுக்கு பிரதேச செயலா ளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸா ன் (நளீமி) தலைமையில் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இறக்காமம் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இதனூ டாக பாடசாலை இடைவிலகளை தவிர்த்து, அவர்களின் பாடசாலைக் கல்வி மற்றும் கற்றல் நடவடிக்கைகளை ஊக்கப்படுத் தும் நோக்கில் இந்த உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும், இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஏ.கே. றொஷின்தாஜ் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு சைக்கிள் களை வழங்கிவைத்தார்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராம ரிப்பு திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகத்தர் எம்.எம். சப்றின், பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஏ.எல். ஹுசைன், உளவளத்துணை உவியாளர் ஏ.எச். றகீப், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட், சிறு வர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா மற்றும் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எம்.ஜி. சுவர்னா ஹேமலதா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# குருக்கள்மடத்திலுள்ள மனிதப் புதைகுழி வழக்கு ஒக்ரோபர் 27 மீள விசாரணைக்கு!

**(மட்டக்களப்பு நிருபர்)**

குருக்கள்மடத்திலுள்ள மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமை(09) களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிவான் த.பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கடந்த 23.09.2025 கொழும்பு பிரதம சட்ட வைத்திய அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்டு, அகழ்வு தொடர்பான பாதீடு மற்றும் அதனுடைய விரிவாக்கம் மன்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நிதி அமைச்சுக்கும் நீதி அமைச்சுக்கும் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கமானது இன்று (09) குறித்த செயன்முறை தொடர்பான விடயங்களின் முன்னேற்றங்கள் ஆராய அழைக்கப் பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்கள் விநியோகித்த நபர் அம்பாறையில் கைதானார்!




**(பாறுக் ஷிஹான்)**

நீண்டகாலமாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்களை சூட்சுமமாக விநியோகித்த சந்தேக நபரை அம்பாறை தலைமையகப் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இன்று அம்பாறை தலைமையக பொலிஸ் பிரதான பரிசோதகர் அசேல கே ஹேரத்தின் மேற்பார்வையின் கீழ் அம்பாறை தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் ஒரு மாத காலமாக நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடான டுபாயில் இருந்து இயங்கும் போதைப்பொருள் கடத்தல்காரரின் தலைமையில் குறித்த கைதான சந்தேக நபர் செயல்பட்டு வருகிறார் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

தற்போது கைதான சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அம்பாறை மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் அறிவுறுத்தலின் பேரில் அம்பாறை பிரிவுக்குப் பொறுப்பான பதில் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமார வின் வழிகாட்டுதலின் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மஸ்கெலியா தேயிலைத் தொழிற்சாலையில் நடந்த தீ விபத்துக்கு செந்தில் தொண்டமான் கண்டனம்!



மஸ்கெலியா, லக்சபான தோட்டம், வாழமலை பிரிவில் உள்ள தேயிலை தொழிற்சாலையில் நேற்று நள்ளிரவு தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் இவ் விபத்துக்கு இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

தேயிலை தொழிற்சாலை என்பது எமது மக்களின் வாழ்வாதாரம் என்பதோடு, அது எமது அடையாளம். அதை பாதுக்காக்க வேண்டிய பொறுப்பு கம்பனிகளுக்கு உள்ளது எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தேயிலை தொழிற்சாலை தீக்கிரையாகியுள்ளமைக்கு இதற்கு தொழிற்சாலை பொறுப்பதிகாரிகள், கம்பனியினரின் தான்தோன்றித்தனமே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.



# பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்பு தொடர்பிலான செயற்குழுக் கூட்டம்!





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவை தொடர்பாக காலாண்டுக்கு ஒரு முறை பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை வன்முறை தடுப்பு குழு கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், 2025 ஆம் வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்கான பிரதேச சிறுவர் கண்காணிப்பு மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான செயற்குழு கூட்டம் இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பி. யசோதாவின் ஒருங்கிணைப்பில் நிர்வாக உத்தியோகத்தர் ஐ.எல். முஹம்மட் றஸாக் தலைமையில் இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடைவிலகல், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விசேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் தொடர்பான விடயங்கள் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் 2025 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டுக்கான செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

பால்நிலை வன்முறை மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரதேச மட்டத்திலான அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைத் திட்டங்கள், குடும்ப வன்முறை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் அவற்றைக் குறைப்பதற்கும் தடுப்பதற்குமான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த கூட்டத்துக்கு இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளர் சார்பாக உறுப்பினர் ஏ.எம். சாகீர் மற்றும் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி, வலயக் கல்வி பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர் எஸ்.எல். நிஸார், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எல். சபீர், சிறுவர் நன்னடத்தை திணைக்களம், அதிபர்கள், ஜும்ஆ பள்ளிவாசல், ஜம்இய்யதுல் உலமா சபை, பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் பிரதிநிதிகள், மகளிர் சங்க பிரதிநிதிகள், உளவளத் துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். முஹம்மட் இம்டாட், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எம். எம்.கே. சாஜிதா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி எம்.ஐ. பஸீனா, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அபிவிருத்தி உத்தியோகத்தர் டி. ஜெயமோகன், கலாச்சார உத்தியோகத்தர் ஏ. எம். ஆரிப், ஏ.எல். நௌபீஸா, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். றினோஸா, சமுதாயம்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. நிஸ்வான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சவூதி - பாகிஸ்தான் தூதர்கள் சந்திப்பு!

**(எஸ். சினீஸ் கான்)**



இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியை, இலங்கைக்கான பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் ஃபஹீம் உல் அசிஸ் நேற்று புதன்கிழமை (08) சவூதி அரேபிய தூதரகத்தில் சந்தித்தார்.

இரு நாட்டு உறவுகளையும் மேலும் பலப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த உயர் மட்ட இராஜதந்திரச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் பொதுவான விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.







# பிள்ளைகளையும் மக்களையும் பாதுகாத்து இயல்பு வாழ்வை உறுதி செய்து தருங்கள்!

## மனித உரிமை ஆணைக் குழுவில் இது தொடர்பில் முறைப்பாடு

**(எஸ். நிதர்ஷன்)**

வாள் வெட்டு மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தமது பிள்ளைகளை அதில் ஈடுபடுமாறு வற்புறுத்திப் பல்வேறு இடையூறுகளை மேற்கொள்ளும் நபரிடமிருந்து தமது பிள்ளைகளின் பாதுகாப்பையும் பிர தேச வாழ் மக்களது இயல்பு வாழ்வை யும் உறுதி செய்ய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கோரி யாழ். அரசடி வாழ் மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலு வலகத்தில் முறைப்பாடு செய்துள்ள னர்.

குறிப்பிட்ட ஒரு நபர் தொடர்பில் இந்த முனைறப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டை இன்று (09) முற்பகல் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசடி வாழ் மக்கள்,

நபர் நீண்டகாலமாகப் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு சிறைக்கும் சென்று வருகின்றார்.

எமது அரசடி பகுதியில் வாள்வெட்டு சம்பவங்கள் இவரது பின்னணியில்தான் நடைபெற்று வருகின்றன.

இவை குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுப்ப தில்லை. இதனால் நாம் நாளாந்தம் பொரும் துன்பங்களுக்கு ஆளாகி வரு கின்றோம்.

இந்த நிலையில், அண்மையில் அரசடியில் குறித்த சட்டவிரோத நபரால் வெளியூரில் இருந்து சிலர் வரவழைக் கப்பட்டு வாள் வெட்டு சம்பவம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது எமது பிள்ளைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

இதன்போது ஒருவர் காயங்களுக் குள்ளானார். இதனைக் காரணமாக வைத்து எமது ஏழு பிள்ளைகளைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

ஆனால் குறித்த சம்பவத்துடன் தொடர் புடைய நபர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்த நிலையில்தான் எமது பிள்ளை கள் மீது தேவையற்ற வகையில் சோடிக் கப்பட்ட வழக்குகள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நாம் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்துள்ளோம்.- என்று தெரி வித்தனர்.



# கல்லுண்டாய் குடியேற்றக் கிராமத்துக்கான திட்டம் அடுத்த ஆண்டில் நடைமுறைக்கு!

## வடக்கு மாகாண சபையால் நிதி ஒதுக்கப்படும் என்று ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

கல்லுண்டாய் குடியேற்றக் கிராமத்துக்கான மூலத்திட்டம் வடக்கு மாகாண பொறியியலாளர் சங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபையால் படிப்படியாக நிதி ஒதுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கல்லுண்டாய் குடியேற்றக் கிராமத்தில் புலம்பெயர்ந்தவர்களின் நிதிப் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்திர நிலா மணிமண்டபம் வடக்கு மாகாண ஆளுநரால் இன்று (09) வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இங்கு ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் 2017ஆம் ஆண்டுதான் இந்தக் கல்லுண்டாய் குடியேற்றக் கிராமம் உருவாக்கப்பட்டது. இந்தக் கிராமத்துக்கு மக்களின் பல தேவைகள் இன்னமும் முழுமைப்படுத்திக் கொடுக்கப்படவேண்டியுள்ளன. நீங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் உங்களுக்கான அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதைப்போல நீங்கள்தான் உங்கள் கிராமத்தை, வீட்டை முன்னேற்றுவதற்கு உழைக்கவேண்டும். உங்களின் அக்கறையிலும் அர்ப்பணிப்பிலும்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

இந்த மணிமண்டபத்தை நிறுவுவதில் பல இடர்களை எதிர்கொண்டமை எனக்குத் தெரியும். ஆனாலும், மிகச் சிறப்பாக இதை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இங்குள்ள மக்கள்தான் இதனை மிக அழகாக அப்படியே பாதுகாத்து பயன்படுத்தவேண்டும்.

புலம்பெயர்ந்தவர்கள் எமது மக்களுக்கு உதவி செய்வதற்கு விரும்புகின்றார்கள். ஆனால் இங்குள்ள சிலர் அவர்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் நம்பிக்கையை மோசடி செய்கின்றனர். அதனால் புலம்பெயர்ந்தவர்கள் உதவி செய்வதற்குப் பின்னடிக்கும் நிலைமையும் காணப்படுகின்றது. வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதன் ஊடாகவும் அவர்களின் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாமல் நடப்பதன் ஊடாகவுமே வெற்றிகரமாகத் திட்டங்களைச் செயற்படுத்தலாம்.

இந்தக் கிராமம் மேலும் வளர்ச்சியடையவேண்டும். அதற்கு மாகாண சபை ஊடாக வழங்கக் கூடிய உதவிகளை வழங்குவேன்.–

இந்த நிகழ்வில், சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர்.













# பாண்டிருப்பில் பாண்டவரின் வனவாசம்!



(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் வன வாச நிகழ்வு நேற்று (08) புதன்கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.









# கிழக்கு மாகாண அறநெறிப் பாடசாலைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சீருடைத் துணிகள்

அம்பாறை– திருக்கோவில் பிரிவில் அமைந்துள்ள பூம்புகார் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாகச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது 97 மாணவர்களுக்கான சீருடை துணிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை – ஈச்சிலம்பத்தை பிரதேச செயலக பிரிவில் உள்ள, வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ள 07 அறநெறிப் பாடசாலைகளில் உள்ள 337 மாணவர்களுக்கான சீருடை துணிகளும் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்களால் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டன.






# தொலைபேசியில் தொடர்புகொண்டு விஜய்க்கு ஆறுதல் கூறிய பழனிசாமி

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி, த.வெ.க தலைவர் விஜய்யை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி கரூரில் மேற்கொண்ட பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர்.

இந்த விவகாரத்தில் அண்மைக் கால நிகழ்வுகள், விஜயை குற்றவாளியாக ஆக்கிவிடும் வகையில் இருப்பதாகவும், விஜய் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றார் எனவும் விரக்தியில் இருக்கின்றார் என்றும் த.வெ.க. வட்டாரங்கள் தெரிவித்தன.



இதனிடையே விஜய்யிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினர் என தகவல் வெளியானது. இதனால் இவ்விரு கட்சிகளுடன் விஜய்யை தங்கள் கூட்டணிக்கு இழுக்க முயற்சிப்பதாக கூறப்பட்டது.

இந்த சூழலில் விஜய் தனியாக போட்டியிடுவது சிரமம், அனுபவம் வாய்ந்த கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, 2026 தேர்தலை சந்திப்பது நல்லது என, அவருக்கு நெருக்கமான சிலர் ஆலோசனை கூறியிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி, விஜய்யை கடந்த 6 ஆம் திகதி மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார் என்றும் கூட்டணிக்கு வருமாறு அழைத்தார் எனவும் அதற்கு விஜய் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த உரையாடலின்போது, “நம் இருவருக்கும் பொது எதிரி தி.மு.க. அதை 2026 தேர்தலில் இணைந்து வீழ்த்துவோம் ” என்றும் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கூட்டணித் தொடர்பான முடிவு மற்றும் தொகுதி பங்கீடு தொடர்பாக அடுத்த ஆண்டு ஜனவரியில் முடிவு செய்துகொள்ளலாம் என்று இரு தரப்பும் முடிவு செய்திருப்பதாக அ.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழகத்தை கைப்பற்றுவதற்கு புதிய கட்சிகளை தேடும் பா.ஜ.க.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்

தமிழகத்தை எப்படியாவது கைப்பற்றி விட வேண்டும் என்பதற்காக அ.தி.மு.க. துணையுடன், தற்போது புதிய கட்சிகளை பா.ஜ.க. தேடிக் கொண்டிருக்கிறது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீரங்கம் சட்டப்பேரவை தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பூத் கொமிட்டி ஆலோசனைக் கூட்டம், திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்தார்.



இந்தக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில்,

”மத்திய பா.ஜ.க. அரசு திமுகவை வீழ்த்த பல்வேறு திட்டங்களை தீட்டுகிறது. அதையெல்லாம் தாண்டி சிறந்த ஆட்சியை முதல்வர் வழங்கு கிறார்.

தமிழகத்தை எப்படியாவது கைப்பற்றி விட வேண்டும் என கூட்டணியில் உள்ள பழைய கட்சியான அ.தி.மு.கவின் துணையுடன், தற்போது புதிய கட்சிகளை பா.ஜ.க. தேடிக் கொண்டிருக்கிறது. எத்தனை கட்சிகள் வந்தாலும் தி.மு.க. வெற்றி பெறுவதை தடுக்க முடியாது.

பூத் கொமிட்டியினர் தான் தி.மு.கவின் ‘ஸ்டெதாஸ் கோப்’ போன்றவர்கள். நீங்கள் உங்கள் பகுதியில் உள்ள அனைத்து மக்களுடனும் தொடர்பில் இருக்க வேண்டும். தீவிரமாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு 200 இற்கும் அதிகமான தொகுதிகளில் தி.மு.கவை வெற்றி பெற செய்ய வேண்டும்.” என்றார்.

# சிறப்பு புலனாய்வு குழுவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க. வழக்கு

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு குறித்து விசாரிப்பதற்காக சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கரூரில் கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து நீதிபதி செந்தில்குமார் உத்தரவிட்டார்.

இந்நிலையில், இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க. சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. கட்சியின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா சார்பில், அவரது வழக்கறிஞர் யாஷ் எஸ்.விஜய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.







# பணயக்கைதிகளை திருப்பி அனுப்ப இஸ்ரேலும் ஹமாஸும் உடன்பாடு

காசாவின் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அமைதித் திட்டத்தின் முதல் கட்டமான நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் ஒப்பந்தத்திற்கு இஸ்ரேலும் ஹமாஸும் ஒப்புக்கொண்டன.

எகிப்தில் நடந்த மறைமுகப் பேச்சுவார்த்தைகள், பாலஸ்தீனப் பகுதியில் அமைதியைக் கொண்டுவருவதற்கான ட்ரம்பின் 20 அம்ச கட்டமைப்பின் ஆரம்ப கட்டத்தில் ஒரு உடன்பாட்டை எட்டின.

இந்த ஒப்பந்தம் முழுமையாக செயல்படுத்தப்பட்டால், பிராந்திய மோதலாக உருவெடுத்த போரை நிறுத்துவதற்கான முந்தைய எந்த முயற்சியையும் விட இரு தரப்பினரும் நெருக்கமாக அமைதிருக்குத் திரும்புவார்கள்.

இந்த ஒப்பந்தம் பற்றிய செய்தி இஸ்ரேல், காசா மற்றும் அதற்கு அப்பால் கொண்டாட்டங்களைத் தூண்டியது.

இஸ்ரேலிய பணயக்கைதிகளின் குடும்பங்கள் பட்டாசுகளை வெடித்தன, பாலஸ்தீனியர்கள் இரத்தக்களரிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நம்பிக்கையில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

எனினும், நேற்று தாமதமாக ட்ரம்ப் அறிவித்த ஒப்பந்தம் விவரங்கள் குறைவாகவே இருந்தது.

மேலும் முந்தைய அமைதி முயற்சிகளில் நடந்தது போல, அதன் சரிவுக்கு வழிவகுக்கும் பல தீர்க்கப்படாத கேள்விகளை விட்டுச் சென்றது.

இந்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடிப்பது குடியரசுக் கட்சி ஜனாதிபதிக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெளியுறவுக் கொள்கை சாதனையாக இருக்கும்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இன்று தனது அரசாங்கத்தை கூட்டி இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதாகக் கூறினார்.

திட்டத்தின் முதல் கட்ட ஒப்புதலுடன், எங்கள் அனைத்து பணயக்கைதிகளும் நாட்டிற்கு கொண்டு வரப்படுவார்கள் என்றதுடன், இது இஸ்ரேல் அரசுக்கு ஒரு இராஜதந்திர வெற்றி என்றார்.

அதேநேரம், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உடன்பாட்டை எட்டியதாக ஹமாஸ் உறுதிப்படுத்தியது,

இந்த ஒப்பந்தத்தில் இஸ்ரேலியர்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறுவது மற்றும் பணயக்கைதிகள்-கைதிகள் பரிமாற்றம் ஆகியவை அடங்கும் என்று கூறியது.

2023 ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் எல்லை தாண்டிய தாக்குதலுக்கு இஸ்ரேல் இராணுவ பதிலடி கொடுக்கத் தொடங்கியதிலிருந்து 67,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும், பெரும்பாலான பகுதி தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் காசா அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 251 பேர் காசாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் 48 பணயக்கைதிகளில் 20 பேர் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

எவ்வாறெனினும், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நம்பிக்கைகள் எழுந்துள்ள போதிலும், நேரம், காசா பகுதிக்கான போருக்குப் பிந்தைய நிர்வாகம் மற்றும் ஹமாஸின் தலைவிதி உள்ளிட்ட முக்கியமான விவரங்கள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

# அடுத்த 48 மணி நேரத்திற்குள் பிரான்ஸுக்குப் புதிய பிரதமர்

## ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவிப்பு

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அடுத்த 48 மணி நேரத்தில் ஒரு புதிய பிரதமரை நியமிப்பார் என்று நேற்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் பல தசாப்தங்களில் பிரான்ஸின் மோசமான நெருக்கடிக்கு மத்தியில் ஒரு முன்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் என அவர் கூறினார்.

இந்த அறிவிப்பு இன்று மாலைக்குள் பிரதமர் நியமனம் செய்யப்படும் என்பதை வெளிக்காட்டுகின்றது.

கடந்த திங்களன்று, மக்ரோனின் நெருங்கிய நண்பரான செபாஸ்டியன் லெகோர்னு, ஒரு வருடத்திற்குள் தனது பதவியை விட்டு வெளியேறிய மூன்றாவது பிரெஞ்சு பிரதமரானார்.

நெருக்கடியைத் தீர்க்க முன்கூட்டியே சட்டமன்றத் தேர்தல்கள் அல்லது மக்ரோனின் இராஜினாமாவை விட புதிய பிரதமர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்ப்பதாக லெகோர்னு பிரெஞ்சு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.



பிரான்சை உலுக்கிய மூன்று கொந்தளிப்பான அரசியல் சம்பவங்களின் அண்மைய திருப்பங்களாக இந்த முன்னேற்றங்கள் வந்துள்ளன.

மேலும் அவை ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினரின் ஸ்திரத்தன்மை குறித்த கவலைகளை எழுப்பின.

லெகோர்னு ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குப் பின்னர் கடந்த திங்கள்கிழமை அதிகாலை இராஜினாமா செய்தார்.

எனினும், தற்போதைய அரசியல் நெருக்கடியிலிருந்து எப்படி மீள்வது என்பது குறித்து கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை எட்ட இரண்டு நாள்கள் பதவியில் இருக்குமாறு மக்ரோன் அவரைக் கேட்டுக் கொண்டார்.

2024 ஜூலை மாதம் நடந்த திடீர் தேர்தல்களைத் தொடர்ந்து பிரான்சின் அரசியல் முட்டுக்கட்டை தொடங்கியது.

அதன் பின்னர் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை.

இதனால் வரவு செலவு திட்டம் உட்பட எந்த சட்டங்களையும் அல்லது சீர்திருத்தங்களையும் நிறைவேற்றுவது கடினமாகிவிட்டது.

கனடா முரசு
வியாழக்கிழமை | 09/10/2025

**பாடசாலை நுழைவாயிலில் மாணவி மீது கத்திக்குத்து**



02▶



# மனிடோபா மாகாண முன்னாள் முதல்வருக்கு 18,000 டொலர் அபராதம் விதித்தது நீதிமன்றம்

கனடாவின் மனிடோபா மாகாணத்தின் முன்னாள் முதல்வருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

மனிடோபாவின் முன்னாள் முதல்வர் ஹெதர் ஸ்டெஃபன்சனுக்கு 18,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், மாகாண நெறிமுறை ஆணையர் ஜெஃப்ரி ஸ்னூர் வழங்கிய அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மற்றும் தண்டனைகளை அங்கீகரித்துள்ளனர்.

அறிக்கையில், 2023 தேர்தலில் பிரோகிரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்தபின், புதிய என்.டி.பி. அரசு பதவியேற்கும் முன், ஸ்டெஃபன்சன் ஒரு சுரங்கத் திட்டத்துக்கு அனுமதி பெற முயன்றார் 02▶

# கனடாவில் அதிகரித்துவரும் இனவெறுப்பு: நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தாக்குதல்

கனடாவில் இனவெறுப்பு எந்த அளவுக்கு அதிகரித்துவருகிறது என்பதற்கு ஆதாரமாக சமீபத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் கவனம் ஈர்த்துள்ளது.

இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இனவெறுப்பு தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்!

இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்தீப் க்ரேவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது குடும்பத்துடன் Muskoka என்னுமிடத்தில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண்டிருந்திருக்கிறார்..

ஹர்தீப், ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்றத்தின் உறுப்பினராக உள்ளார்.

குடும்பத்துடன் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஹர்தீப்பை நோக்கி அவ்வழியே வந்த ஒருவர், ஏ தலைப்பாகைத் தலையா, உன் நாட்டுக்குத் திரும்பிப் போ என்று சத்தமிட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து சென்றுள்ளார்.



மற்றொரு நபரோ, நீங்களெல்லாரும் சாகவேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த சம்பவம் இனவெறுப்புக்கு எதிரான போராட்டம் முடியவில்லை என்பதை அப்பட்டமாக உணர்ந்தேன் என்கிறார் ஹர்தீப்.

சமூக ஊடகமான எக்ஸில் தான் சந்தித்த வேதனைக்குரிய விடயம் குறித்து பகிர்ந்துகொண்டுள்ள ஹர்தீப், என் சீக்கிய சகோதர சகோதரிகளே, கவனமாக இருங்கள், பெருமையுடன் இருங்கள், உறுதியாக இருங்கள், வன்முறை வென்றதாக சரித்திரமே இல்லை, நல்லெண்ணமே வெல்லும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான, குறிப்பாக, இந்தியர்களுக்கு எதிரான இனவெறுப்பு அதிகரித்து வருவதற்கு ஆதாரமாக பல சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன.

சமீபத்தில், Mississauga நகரில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா ஒன்றின் அருகில், தெளிவாகத் தெரியும் ஒரு இடத்தில், இந்திய எலிகள் என பெரிய எழுத்துக்களில் பெயிண்ட் மூலம் எழுதப்பட்டிருந்தது.

ஒரு கனேடிய அரசியல்வாதி கூட, இந்த விடயங்களுக்கு எதிராக கருத்து தெரிவிக்கவில்லை.





# பாடசாலை நுழைவாயிலில் மாணவி மீது கத்திக்குத்து

கனடாவின் மான்ட்ரீயலில் உள்ள செயிண்ட்-லூக் உயர்நிலைப் பள்ளி நுழைவாயிலருகே ஒரு 14 வயது மாணவி கத்திக்குத்து தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மான்ட்ரீயல் பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க் கிழமை காலை 8.50 மணியளவில், வகுப்புகள் தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, நோட்ரே டேம் டி கிரேஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸுக்கு பல அவசர அழைப்புகள் வந்ததையடுத்து பொலிஸார் விரைவாக சம்பவ இடத்துக்கு சென்றனர். சிறுமி கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் காயமடைந்துள்ளார்.

மேலும், அவரது கண் கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்த சம்பவம் குறித்த விசாரணைகளின் அடிப்படையில் 17 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி சிறுவன் இளைஞர் நீதிமன்றத்தில் முன்னிலையாகுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட சிறுவனும் பாதிக்கப்பட்ட சிறுமியும் இருவரும் சிறுவயதினர் என்பதால், அவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.







# கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இந்திய வம்சாவளி இளைஞருக்கு பிணை

கனடாவின் மனித்தோபா மாகாணத்தில் ஒரு தாயும் மகளும் உயிரிழக்கக் காரணமாக இருந்த விபத்தொன்றை ஏற்படுத்திய இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் தலைமறைவாகியிருந்த நிலையில், சமீபத்தில் கனடாவில் கால்வைத்த அவரை பொலிசார் கைது செய்தனர்.

கடந்த ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் திகதி, மனித்தோபா மாகாணத்திலுள்ள Altona என்னுமிடத்தில் சிக்னலில் நிற்காமல் சென்ற ட்ரக் ஒன்று கார் ஒன்றின் மீது மோதியது.

அந்த விபத்தில், காரில் பயணித்த சாரா (வயது 35) என்னும் பெண் சம்பவ இடத்திலேயே பலியானார். அவருடன் பயணித்த அவரது மகளான அலெக்சா (வயது , 8) மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தாள்.

விபத்தை ஏற்படுத்திய ட்ரக்கை இயக்கிய நவ்ஜீத் சிங் (வயது 25) என்னும் இளைஞரும் காயங்களுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில், மாயமானார்.

இந்நிலையில், ஓகஸ்ட் மாதம், எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றில், ரொரன்றோவிலுள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையம் வந்திறங்கிய சிங்கை பொலிஸார் கைது செய்தனர். தற்பொழுது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

## மனிடோபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை “பிற மக்களின் நலனுக்காக தவறாகச் செயல்பட்டது” என நெறிமுறை ஆணையர் ஸ்னூர் குற்றம் சுமத்தியுள்ளார். பதவி விலகும் அரசுகள் பெரிய முடிவுகளை எடுக்கக் கூடாது என்ற நீண்டகால சட்டமன்றக் கொள்கைக்கு எதிரானது எனவும் கூறி யுள்ளார்.

இதேவேளை, ஸ்டெ ஃபன்சன் தனது செயல் பொது நலனுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டது என்றும், திட்டத்தில் தனிப்பட்ட நலன் எதுவும் இல்லை என்றும், இறுதியில் அந்த சுரங்க அனுமதி வழங்கப்படவில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

தற்போது எதிர்க்கட்சியில் உள்ள பிரோகிரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி, என்.டி.பி.யுடன் இணைந்து அறிக்கையை ஆதரித்துள்ளது.

ஆனால், அவர்கள் ஸ்டெ ஃபன்சனின் அபராதத் தொகையைச் செலுத்த எந்த உதவியும் வழங்கமாட்டோம் என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர்.